# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 92/2024 LW- 9 PW- 7

| | |
|---|---|
| Name | : கருப்பசாமி ( நிபுணர் சாட்சி) |
| Father's/Husband's Name | : குமாரசாமி |
| Village | : அரியலூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் |
| Taluk | : அரியலூர் |
| District | : அரியலூர் |
| Age | : 55/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of March 2026

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது அரியலூர் வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.06.2024ம் தேதி மாலை 3.30 மணியளவில் நான் நத்தம் பகுதி அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தைப் பெற்று நத்தம் காவல் நிலைய குற்ற எண்.603/2023 என்ற வழக்கில் சம்பந்தப்பட்ட TN 57 BV 4575 என்ற பதிவு எண் கொண்ட Hero Splender plus இருசக்கர வாகனத்தை எனது அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். **(மேற்படி வேண்டுகோள் கடிதம் (கணிணி மூலம் பதிவு செய்யப்பட்டது.) அ.த.சா.ஆ.9ஆக குறியீடு செய்யப்படுகிறது.) எனது ஆய்வில் மேற்படி வாகனத்திற்கு எந்த சேதாரமும் இல்லை என்று சான்று அளித்தேன். கால் தடைத் திறன் 68 விழுக்காடாக இருந்தது. டயர்கள் நல்ல நிலையில்இருந்தது. இந்த வாகன விபத்தானது எந்தவித இயந்திரக் கோளாறினால் ஏற்படவில்லை என சான்று வழங்கினேன். (TN 57 BV 4575**

**என்ற பதிவு எண் கொண்ட Hero Splender plus இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.10ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** ஒரு நபர் மீது இருசக்கர வாகனம் மோதினால் அந்த இருச்சக்கர வாகனத்திற்கு சேதாரங்கள் ஏற்படாமல் இருக்க வாய்ப்புகள் உள்ளதா என்றால் உள்ளது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. சம்பவம் நடந்து சுமார் 7, 8 மாதங்கள் கழித்து வாகன தணிக்கைக்கு வாகனம் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கால இடைவெளி காரணமாக தான் என்னால் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு கருத்துரை சொல்ல இயலவில்லை என்றால் சரிதான். பொதுவாக இருசக்கர வாகனம் ஆனது ஒரு பொருளின் மீது அல்லது ஒரு நபர் மீது மோதினால் கீழே விழுந்து இருசக்கர வாகனத்திற்கு சேதாரம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது என்றால் சரியல்ல மோதிய பிறகு வாகனத்தை நிறுத்தி விட்டால் அதற்கு சேதாரம் ஏற்பட வாய்ப்புகள் இல்லை. சம்பவத்தின் போது இரு சக்கர வாகனமானது கீழே விழுந்ததா இல்லையா என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்பவமானது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட வாகனத்தால் எவ்வாறு ஏற்பட்டது என்பது சொல்ல இயலாது என்றால் சரிதான் அதன் காரணமாக அந்த வாகனத்தால் தான் சம்பவம் எதிரியால் ஏற்பட்டது என்று சொல்ல முடியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை : இல்லை.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,
Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.11 15:04:16 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்